ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1859/63 - 2014 අප්‍රේල් මස 25 වැනි සිකුරාදා - 2014.04.25

*1859/63 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

LA/ 2218

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் பிட்டபெத்தெர நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட குழாய் கிணறை நிர்மாணிப்பது தொடர்பாக காணித்துண்டொன்றை சுவீகரித்துக்கொள்ள தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2014, ஏப்பிறல் 11.*
*5/2/2/1024*

**அட்டவணை**

*தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில், பிட்டபெத்தர பிரதேச செயலாளர் பிரிவின், கொரக்கவெல கிராம அலுவலர் பிரிவின், கொரக்கவெல எனும் கிராமத்தில் அமைந்துள்ள நரியவிலதெனிய மற்றும் ஓகந்த அல்லது நரியவில ஓகந்த எனும் காணித்துண்டில், அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. பி. எஸ். ஸ்டீவன் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட705A ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 13 இல் குறிப்பிடப்படும் முழு விஸ்தீரணத்தில் சுமார் 05 பேர்ச்சஸ் விஸ்தீரணம் உடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு .*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இதே வரைபடத்தின் துண்டு இலக்கம் 28 எனக் காண்பிக்கப்படும் பாதை ; |
| கிழக்கு | : | இதே காணியின் எஞ்சிய பகுதி மற்றும் பாதை ; |
| தெற்கு | : | இதே காணியின் எஞ்சிய பகுதி ; |
| மேற்கு | : | முருங்கன் கால்வாய். |

*உரிமைகோருபவர்களின் பெயர் மற்றும் முகவரி:* 1. திரு. உபுல் ரஞ்ஜீவ,
கம்கெதர வத்தை,
சியாபலாகொட கிழக்கு,
பிட்டபெத்தர.

*5 - 321*

## *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கண்டி மற்றும் அதனை அண்மித்த ஒன்றிணைந்த நீர் வழங்கல் செயற் திட்டத்தின், கட்டுகஸ்தொட்ட நீர் சுத்திகரிப்பு சாலையின் விடுதிற்கு பின்புறம் பரிகாரமான நுழைவு வழி ஒன்றை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாத் சொத்துக்களின் உரிமைக்கொள்ளலை பெற்றுக் கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35,*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2014, ஏப்பிறல் 11.*
*5/2/1/1043*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், ஹரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 420, பொல்வத்த கிராம அலுவலர் பிரிவில், கொண்டதெனிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள சுமார் 3 பேர்ச்சஸ் முழு அளவிலான கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்த "கெட்டகேலகஹ ஹேன அல்லது கிரிவெல்கொட ஹின்ன" என்னும் காணித்துண்டு.*

*காணியின் பெயர் : "கெட்டகேலகஹ ஹேன அல்லது கிரிவெல்கொட ஹின்ன"*
*விஸ்தீரணம் : 03 பேர்ச்சஸ்.*
*எல்லைகள் :-*

*வடக்கு : கொண்டதெனிய ரஜமஹர விகாரை மற்றும் காமினி பாலிதரத்ன உரிமைகோரும் காணி மற்றும் வீடுகளுக்குச் செல்லும் பாதை ;*
*கிழக்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக எடுத்துக்கொண்ட காணி (ஆ. வ. இல. மஹ 5398 இல் காணித்துண்டிலக்கம் 26, 27, 29) ;*
*தெற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக எடுத்துக்கொண்ட காணி (ஆ. வ. இல. மஹ 5398 இல் காணித்துண்டிலக்கம் 26, 27, 29) ;*
*மேற்கு : கொண்டதெனிய ரஜமஹ விகாரை மற்றும் காமினி பாலிதரத்ன உரிமைகோரும் காணி.*

*காணிக்கு உரிமைகோருபவர்களின் பெயர் மற்றும் முகவரி:*

*1. விகாராதிபதி தேரர்,*
*கொண்டதெனிய ரஜமஹ விகாரை,*
*கொண்டதெனிய,*
*கட்டுகஸ்தொட்ட.*

*2. பிரதான பொறுப்பாளர்,*
*பிரதான பொறுப்பாளர் திணைக்களம்,*
*கொழும்பு 07.*

*3. காமினி பாலிதரத்ன அவர்கள்,*
*இல. 95, டீங்கிரிதெனிய,*
*பொல்வத்த,*
*கட்டுகஸ்தொட்ட.*

*5 - 322*

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்தன ஆகிய நான், தேசிய நீர் வழுங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கண்டி - வடக்கு பாததும்பரை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற் திட்டத்தின் கல்ஹின்ன புதிய சேவை நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாத் சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை பெற்றுக் கொள்வதற்கான இக்கட்டளையை அனுமதிக்கின்றேன்.

தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஏப்பிறல் 11.
5/2/1/1047

### அட்டவணை

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், பூஜாபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 525, கோவில முதுன கிராம அலுவலர் பிரிவில், கல்ஹின்ன எனும் கிராமத்தில் அமைந்துள்ள, சுமார் 23.7 பேர்ச்சஸ் முழு விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்த "தொடம்கஸ் ஹின்ன வத்த" என்னும் காணித்துண்டு .

காணியின் பெயர் : "தொடம்கஸ் ஹின்ன வத்த"
விஸ்தீரணம் : 23. 7 பேர்ச்சஸ்.
எல்லைகள் :-

வடக்கு : பீ. எம். எஸ். இம்தியாஸ் உரிமைகோரும் கோவில முதுன காணி ;

கிழக்கு : பீ. எம். எஸ். இம்தியாஸ் உரிமைகோரும் கோவில முதுன காணி மற்றும் எம். எச். எம். பைசால் உரிமைகோரும் கோவில முதுன காணி ;

தெற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு எடுத்துக்கொண்ட காணி, எம். எச். எம். பைசால் உரிமைகோரும் கோவில முதுன காணி மற்றும் கல்ஹின்னயிலிருந்து கோவில முதுன பாதை ;

மேற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு எடுத்துக்கொண்ட காணி, பீ. எம். எஸ். இம்தியாஸ் உரிமைகோரும் கோவில முதுன காணி மற்றும் கல்ஹின்னயிலிருந்து கோவில முதுன பாதை ;

உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: 1. திரு. பீ. எம். எஸ். இம்தியாஸ்,
இல. 243/3,
பாடசாலை வழி,
கல்ஹின்ன.

5 - 323

---

LA/2188

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் கரகொட - உயன்கொட நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ருஹுணுபுர குழாய் கிணறு நிர்மாணிப்பது தொடர்பாக காணித்துண்டொன்றை சுவீகரித்துக்கொள்ள தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டு உள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக்கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஏப்பிறல் 11.
5/2/2/1026

**அட்டவணை**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில், கம்புறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின், இல. 317B, கரகொட - உயன்கொட1 கிழக்கு கிராம அலுவலர் பிரிவின், ருஹுணுபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ள நுகேஹேன எனும் காணித்துண்டின், முழு விஸ்தீரணத்தில் சுமார் 10 பேர்ச்சஸ் விஸ்தீரணம் உடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

வடக்கு : லாகந்துபுர பாதை ;
கிழக்கு : அநகாரிக விஹாரை பாதை ;
தெற்கு : வெவே கும்புறு இடம ;
மேற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: 1. கண்டுபிடிக்க முடியாதுள்ளது.

5- 324

---

LA/ 1704

பிழை திருத்தம்

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1768/24 மற்றும் 2012.07.26 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியின் 2 A ஆம் பக்கத்தில் , இல.08- 356 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையில், காணி அமைந்துள்ள கிராமத்தின் பெயர் கல்கடுவஹேன எனக் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், அது ''பலல்ல'' எனவும், காணியின் பெயர் பெலவத்தஹேன எனக் குறிப்பிடப்பட்டு இருந்து போதிலும், அது ''கல்கடுவஹேன'' எனவும், திருத்தியமைக்கப்படல் வேண்டும் என 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் பிரகாரம், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர், தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
''லக்திய மெதுர'',
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஏப்பிறல் 11.
5/2/2/975

5- 325